**தலைப்பு 202 – முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 202 - முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 08 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 158.55 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 157.19 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 1.36 மில்லியன் அதாவது 01 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 82.30 | 81.85 | 0.45 | 0.6 |
| மூலதனம் | 76.25 | 75.34 | 0.91 | 1.3 |
| மொத்தம் | 158.55 | 157.19 | 1.36 | 1.0 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.86 | 1.02 | 1.20 | 1.79 | 12.00 | 5.72 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0135/0013/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 19.21 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 6000/0000/00/0016/0094/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 17.42 மில்லியனாக இருந்தது.

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

(iii) இழப்புத் தொடர்பான பதிவேடு — நிதிப்பிரமாணம் 110

(iv) கேள்வி கோரல் பதிவேடு — அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

03 செலவின விடயங்களுக்காக ரூபா 1,000,000 கூட்டுத்தொகையான மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களின் தேறிய நிதிஏற்பாட்டில் 67 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**3.3 கட்டுநிதிக் கணக்கு**

முஸ்லிம் கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்படாமையினால் திணைக்களத்தின் 7002/0000/00/0135/0013/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 19,208,845 தொகையான மீதியொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் அரசாங்க நிதி வெளித்தரப்பினரின் பொறுப்பில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வைத்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

2 வருடங்களை விஞ்சிய ரூபா 16,001,531 கூட்டுத்தொகையான 03 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 314,069 ஆக இருந்ததுடன் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் அந்தக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.6.1 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் திணைக்களத்தால் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள், செயற்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பாக போதியளவான கணக்காய்வொன்று அதில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று 2015 யூன் 30 ஆந் திகதி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சாரதியொருவர் இன்மையினால் அந்த வாகனம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு குறைவான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 681,218 ஆக இருந்தது.

### 3.8 இணங்காமைகள்

#### 3.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) | 336,597 | 6 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 336,597 இனால் மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 135 | 119,141 | 16 சந்தர்ப்பங்களின் போது ரூபா 119,141 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகளுக்காக அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 225 | 70,569 | 32 சந்தர்ப்பங்களின் போது மேலதிகக் கொடுப்பனவுகளிற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் குறித்த மாதிரிப் படிவங்களில் சரியானதாக பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப்பிரமாணம் 237 | 67,155 | ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமானதாக வேலை பூர்த்திசெய்யப்பட்டமைக்கான சான்றிதழொன்று உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட வேண்டிய போதிலும் 02 சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவுகளுக்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3.9 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.9.1 போதியளவில் நிறைவேற்றப்பட்டிராத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக சீருடைகள் வழங்குதல்

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 440 சீருடைத் தொகுதிக்குரிய துணியும், ரூபா 641,133 கூட்டுத்தொகையான 1200 காற்சட்டை துணியும், 154 சேர்ட் துணியும் குறிப்பிட்ட காலத்தில் உரிய மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முஸ்லிம் மதத் தலங்களுக்காக நிதியுதவி வழங்குதல்

மீளாய்வாண்டின் போது முஸ்லிம் மதத்தலங்களுக்கு வழங்குவதற்காக 59 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 29 மில்லியன் நிதிரீதியான உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த உதவியைப் பயன்படுத்துதல் தொடர்பாக திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காலாவதியான ரூபா 1,276,127 கூட்டுத்தொகையான 189 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 395(ஈ) இன் பிரகாரம் திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 முகாமைத்துவ நலிவுகள்

பௌதீக பரிசோதனையின் போது 28 புத்தக வகைகளுக்குரிய ரூபா 174,770 கூட்டுமொத்தப் பெறுமதியான 1202 புத்தகங்கள் குறைவடைந்திருந்தன.

### 3.12 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 04 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | - | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 93 | 58 | 35 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 17 | - |
| | மொத்தம் | 123 | 79 | 44 |